DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : மாரிமுத்து | Father/Husband Name : ஈஸ்வரன் |
| Age : 31 | Village : சாத்தூர் |
| Taluk : | Calling : கூலி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the Nov 5, 2025 1:10 PM

(Accused Present)

**முதல் விசாரணை :-**

1. நான் சாத்தூரில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். இவ்வழக்கில் வாகன விபத்தில் இறந்துபோன கருப்பசாமியை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும்.

2. கடந்த 26.10.2019 ம் தேதி இரவு 07.20 மணிக்கு சாத்தூர் வெள்ளக்கரை ரோடு அருகே SSS காம்ப்ளக்ஸில் நானும் அ.சா.1 ம் பேசிக்கொண்டிருந்தோம். எங்கள் எதிரேயுள்ள மதுரை- கோவில்பட்டி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் சத்தம் கேட்டது. நாங்கள் அந்த இடத்திற்கு சென்று பார்த்தபோது ஆஜர் எதிரி விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுனர் இருக்கையில் அமர்ந்துகொண்டிருந்தார். விபத்தில் காயம்பட்ட கருப்பசாமி சர்வீஸ் ரோட்டிற்கும் தேசியநெடுஞ்சாலைக்கும் இடையேயுள்ள திண்டின் அருகே ஓரமாக காயம்பட்டு கிடந்தார். நாங்கள் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்த பிறகு தான் அவர் அ.சா.1 ன் தகப்பனார் என்று தெரியும். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. நாங்கள் வந்து பார்த்தபோது தான் நடந்து சென்ற கருப்பசாமி மீது கார் மோதி விபத்து ஏற்பட்டது தெரியவந்தது.

3. அந்த விபத்தில் கருப்பசாமிக்கு இடது பக்க காலில், வலது பக்க காலிலும், பின் தலையில் இரத்தக்காயமும், அவரது கழுத்து பகுதியிலும் சட்டை கிழிந்து இரத்தம் வந்துகொண்டிருந்தது. பின்னர் கருப்பசாமியை நாங்கள் தனியார் அவசர ஊர்தி மூலமாக சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சேர்த்தோம். அங்கு சிகிச்சையிலிருந்தபோது கருப்பசாமி இறந்துவிட்டார். பின்னர் அவர்களது வீட்டில் உள்ளவர்களுக்கு தகவல் தெரிவித்தோம். நடந்த சம்பவத்திற்கு அ.சா.1 மற்றும் அ.சா.2 புகார் அளிக்க காவல்நிலையம் சென்றார்கள். இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

4. SSS காம்ப்ளக்ஸ்க்கு முன்பாக நானும் சேர்மராஜ்ம் மட்டும் தான் பேசிக் கொண்டிருந்தோம் என்றால் சரிதான். வழக்கு விபத்து நடைபெற்ற உடனையே அங்கே போலீசார் வந்து விட்டார்கள் என்றால் சரிதான். நாங்கள் மருத்துவமனைக்கு சென்ற பிறகு சாத்தூர் நகர் காவல் நிலையத்திலிருந்து போலீசார் அங்கே வந்து விட்டார்கள் என்றால் சரிதான். அங்கு வைத்து போலீசார் என்னிடமும், சேர்மராஜ் மற்றும் பசுபதி ஆகியோரிடமும் வழக்கு விபத்து எவ்வாறு நடைபெற்றது என்று விசாரித்தார்கள் என்றால் சரிதான். அங்கு வைத்து போலீசார் புகார் வாக்குமூலம் வாங்கிக் கொண்டார்கள் என்றால் சரிதான். நான்

சொல்வது போல் வழக்கு விபத்தை ஏற்படுத்திய நபர் வாகனத்தில் இல்லை என்றால் சரியல்ல.

5. அ.சா.1 சேர்மராஜ் எனக்கு என்ன உறவு என்றால் பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். நான் சம்பவம் நடைபெற்ற போது சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் சேர்மராஜ் எனக்கு பக்கத்து வீட்டுக்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Nov 5, 2025 1:20 PM

Judicial Magistrate 2, Sattur